# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழில் துறையினருக்கான ஆளுமைவிருத்தி செயல்திட்டம்</u>

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழில் துறையினருக்கான விசேட ஆளுமைவிருத்தி செயல்திட்டம் ஒன்று 2026 ஜூலை 06 – 23 வரை இந்தியாவில் நடைபெற்ற நிலையில் இலங்கையைச் சேர்ந்த 29 பேராளர்கள் அதில் கலந்துகொண்டனர்.

2025 ஏப்ரலில் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த உத்தியோக பூர்வ விஜயத்தின்போது தற்போது முன்னெடுக்கப்படும் இருதரப்பு ஆளுமை விருத்தி ஒத்துழைப்பின் கீழ் இலங்கை அதிகாரிகள் 700 பேருக்கு வருடாந்தம் இவ்வாறான தனிப்பயனாக்கப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்ட மேம்பட்ட ஆளுமை விருத்தி செயல்திட்டங்களின் கீழ் இத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இந்த 18 நாள் பயிற்சி திட்டமானது இந்திய அரசாங்கத்தால் ஒழுங்கமைக்கப்பட்டு ராஜஸ்தானில் உள்ள இரத்தினக்கல் மற்றும் நகைத்தொழில் நிலையத்தில் நடத்தப்பட்டடது. முழுமையான இரத்தினக்கல் மற்றும் நகைத்தொழில் பெறுமதி சங்கிலியினை உள்வாங்கிய தொனிப்பொருட்கள் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகளை உள்ளடக்கியதாக இத்திட்டம் அமைந்திருந்தது. நடைமுறை ரீதியான உபகரணங்கள், தொகுப்பு, மற்றும் முப்பரிமாண தயார்நிலை பெறுபேறுகள் மற்றும் மேம்பட்ட திறன்களுக்கான வலுவான அடித்தளத்தை கட்டிஎழுப்புதல் உள்ளிட்டவை தொடர்பாக இச்செயல்திட்டம் கவனஞ்செலுத்தியது.

அனுபவக் கற்றலின் ஒரு பகுதியாக, பங்கேற்பாளர்கள் ஜெய்ப்பூரில் உள்ள வெலண்டைன் சில்வர் இன்டர்நேஷனல் போன்ற முன்னணி இரத்தினக்கல் உற்பத்தி ஆலைகளுக்கு கள விஜயங்களை மேற்கொண்டனர். இதன் மூலம், இந்தியாவின் இரத்தினக்கல் மற்றும் நகைத்துறைக் கட்டமைப்பிற்குள் இருக்கும் சமகால உற்பத்தித் தொழில்நுட்பங்கள், வடிவமைப்பு மேம்பாட்டு செயல்முறைகள் மற்றும் நவீன சில்லறை விற்பனை நடைமுறைகள் குறித்து அவர்கள் நேரடி அனுபவத்தைப் பெற்றனர்.

இந்த சிறப்புப் பயிற்சித் திட்டம், இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையே இரத்தினக்கல் மற்றும் நகைத்தொழில் துறையில் தொழில்முறைத் திறன்களை வலுப்படுத்துவதற்கும், அறிவுப் பரிமாற்றத்தை ஊக்குவிப்பதற்கும், நிறுவன மற்றும் தொழில் ரீதியான தொடர்புகளை மேலும் ஆழப்படுத்துவதற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியது. இது, ஆளுமை விருத்தி மற்றும் மக்கள் சார்ந்த பொருளாதார ஒத்துழைப்புக்கான இரு நாடுகளின் தொடர்ச்சியான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது.

****

கொழும்பு

10 ஆகஸ்ட் 2026